# வண்ணாரப்பேட்டை–திருவொற்றியூர் மெட்ரோ ரயில் பாதை

## அடுத்த வாரத்தில் சோதனை ஓட்டம்

**சென்னை, டிச.2:** சென்னை மெட்ரோ ரயில் முதல்கட்ட விரிவாக்க திட்டத்தில், வண்ணாரப்பேட்டை– திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே பாதையில் அடுத்த வாரத்தில் (டிசம்பர் 2–ஆவது வாரம்) சோதனை ஓட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், இந்தப் பாதையில் வரும் ஜனவரி மாத இறுதியில் ரயில் சேவை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் கட்டப்பணிகள் நிறைவடைந்து, சென்னை விமானநிலையம்–வண்ணாரப்பேட்டை முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல்–பரங்கிமலை வரை இரண்டாம் வழித்தடத்திலும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இதைத் தொடர்ந்து, வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை 9.051 கி.மீ. தொலைவிற்கு விரிவாக்க திட்டப்பணிகள்

ரூ.3 ஆயிரத்து 770 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

முதல்கட்ட விரிவாக்கப்பணிகளில்சுரங்கப் பாதையில் சர்.தியாகராயர் கல்லூரி, கொருக்குப்பேட்டை ஆகிய இரண்டு மெட்ரோ ரயில் நிலையங்களும், உயர்மட்டப்பாதையில் தண்டையார்பேட்டை, சுங்கச்சாவடி, தாங்கல், கௌரி ஆசிரமம், திருவொற்றியூர், விம்கோ நகர் ஆகிய 6 மெட்ரோ ரயில் நிலையங்களும் அமைக்கும் பணிகள் வேகமாக நடைபெற்று வந்தன. ஒட்டுமொத்தமாக 80 சதவீதம் பணிகள் நிறைவடைந்திருந்தது. கடந்த ஏப்ரல் மாதத்தில் பணிகளை முடித்து, கடந்த ஜூன் மாதம் முதல் ரயில் சேவை தொடங்க திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்கிடையில், நாடு முழுவதும் அறிவிக்கப்பட்ட பொது முடக்கம் காரணமாக, மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் வெகுவாக பாதிக்கப்பட்டன. பொதுமுடக்கம் தளர்வுக்குப் பிறகு, மெட்ரோ ரயில் கட்டுமானப் பணிகள் ஜூலை மாதம் மீண்டும் தொடங்கி, பணிகள் தீவிரமாக நடைபெற்றுவந்தன. தற்போது பணிகள் அனைத்தும் நிறைவடையும் நிலையில் உள்ளது.

இந்நிலையில், வண்ணாரப்பேட்டை– திருவொற்றியூர் விம்கோ நகர் இடையே விரிவாக்கப் பாதையில் டிசம்பர் 2–ஆவது வாரத்தில் சோதனை ஓட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பாதையில் வரும் ஜனவரி இறுதியில் ரயில் சேவை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: விரிவாக்கப் பாதையில் ரயில் பாதை அமைக்கும் பணி முற்றிலுமாக நிறைவடைந்து விட்டதால், இந்தப்பாதையில் சோதனை ஓட்டம் நடத்த முடியும். டிசம்பர் 2–ஆவது வாரத்தில் டீசல் ரயில் என்ஜினை இயக்கி சோதனை ஓட்டம் நடத்த திட்டமிட்டுளோம்.

தொடர்ந்து, ரயிலையும் இந்தப் பாதையில் இயக்கி பார்க்க உள்ளோம். ரயில் நிலையங்களின் கட்டுமானம், தொலைத்தொடர்பு மற்றும் சிக்னல் அமைப்புகளை நிறுவும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

ரயில் மற்றும் ரயில் நிலையத்துக்கு தேவையான மின்சாரம் 25 கிலோ வாட் என்ற அளவில் கட்டமைப்புகள் நிறுவப்படவுள்ளது. ஜனவரி 2–ஆவது வாரத்தில் இந்தப் பணிகளை முடிக்க உள்ளோம்.

இதைத் தொடர்ந்து, பாதுகாப்பு ஆணையர் ஆய்வு செய்வார். வண்ணாரப்பேட்டை–திருவொற்றியூர் விம்கோநகர் விரிவாக்க பாதையில் ரயில் இயக்கத்துக்கு ஏற்றது என்று சான்றிதழை ஆணையர் வழங்கிய பின்னர் முறையாக ஜனவரி இறுதியில் அல்லது பிப்ரவரி முதல் வாரத்தில் சேவை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது என்றனர்.

